# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

<u>ஆணை நாள்: 09.11.2020</u>

<u>முன்னிலை</u>

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

……………

**<u>வழக்கு எண். NC2531/F/2019 (SA8149/F/2018)</u>**

**திரு. ஆர். ராஜாசிதம்பரம் … மேல்முறையீட்டாளர்**

**/எதிர்/**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**துணை மேலாளர் (நிர்வாகம்),**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**
**(கும்பகோணம்) லிமிடெட்,**
**கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.04.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 27.06.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 23.08.2018 |
| **ஆணையத்தின் ஆணை நாள்** | **13.08.2019** |
| **ஆணையத்திற்கு மனு நாள்** | **02.11.2019** |

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு ஏற்கனவே 13.08.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு ஆர். ராஜாசிதம்பரம் மற்றும் திரு நாகமுத்து, பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் **26/04/2018** மனுவில், தமிழக அரசு பேருந்து கட்டணத்தை 20.01.2018 அன்று உயர்த்தியது, பேருந்து கட்டண உயர்வுக்கு முன்னர் 19.01.2018-க்கு முன்பும், 201.01.2018ம் தேதி பின்பும் சென்னையிலிருந்து, கோவையிலிருந்து, சேலம், நாமக்கல், முசிறியிலிருந்து சத்திரம் பேருந்து நிலையம் வரை பேருந்தில் செல்ல போக்குவரத்து துறையால் நிர்ணயிக்கப்பட்ட தூரம் பற்றியும், உழவர் சந்தை வழியாக மத்திய பேருந்து நிலையம் செல்லவும், சத்திரம் நிலையம் வராமல் டோல்கேட், கொள்ளிடம் பாலம், காவிரி பாலம், மன்னார்புரம் டோல்கேட் வழியாக மத்திய பேருந்து நிலையம் வரை பேருந்தில் செல்ல நிர்ணயிக்கப்பட்ட தூரம் பற்றியும், சாதாரண பேருந்து, விரைவு, அதிவிரைவு, குளிர்சாதன பேருந்தில் செல்ல நிர்ணயிக்கப்பட்ட கட்டண விபரம் என்பன போன்ற தகவல்களை வழங்கக் கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், அரசு போக்குவரத்து பொது மேலாளர், பெரியமிளகுபாறை, கலெக்டர் ஆபிஸ் ரோடு, திருச்சி, என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 29.05.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 27.06.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், கூட்டாண்மை அலுவலகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம், அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 12.07.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 5(1)(vii)-ல் 13.08.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 02.11.2019 தேதியிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் தான் கோரிய தகவல்களை வழங்கியதாக ஆணையத்தில் தெரிவித்தார். ஆணையம் இதனை பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை ஏற்கனவே 16.09.2019 கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேல்முறையீட்டாளரும் அதனை ஒப்புக் கொண்டதன் பேரில், இவ்வழக்கில் மேலும் விசாரணை செய்ய வேறு முகாந்திரம் இல்லையென கருதி இவ்வழக்கு முற்றாக்கப்படுகிறது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். NC2531/F/2019 (SA8149/F/2018)</u>**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**துணை மேலாளர் (நிர்வாகம்),**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**
**(கும்பகோணம்) லிமிடெட்,**
**கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.**

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

**திரு ஆர்.ராஜாசிதம்பரம்,**
**நாரணமங்கலம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம்,**
**பெரம்பலூர் மாவட்டம் - 621 109.**

Copy to: Judgement File/ Spare
JE/PA -16.11.2020